2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றுகை கூற்றில் 02 வகையான மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு கூட்டுமொத்தம் ரூபா 5,497,585 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரி புத்தகத்தில் (SA – 82) அவை கூட்டுமொத்தம் ரூபா 2,800,845 எனக் காட்டப்பட்டிருப்பதனால் கூட்டுமொத்தம் ரூபா 2,696,740 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.6.1.2 முற்பணக் கொடுப்பனவு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2022 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் நீக்கப்பட்ட அமைச்சுக்களுக்கான முற்பணக்கணக்கு மீதிகள் மீதியில்லாத பிரகாரம் உரிய புதிய அமைச்சுக்கு கையளிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு (409) மற்றும் வெளிநாட்டு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு (412) என்பவற்றுக்கான முறையே கூட்டுமொத்தம் ரூபா 1,427,500 வரவு மீதியும் கூட்டுமொத்தம் ரூபா 1,687,703 செலவு மீதியும் நாளதுவரை திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவி வறிதாக்கப்பட்ட, சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்த, பதவியினை விட்டுச் சென்றிருந்த, இறந்த அலுவலர்களது ஐந்து பதவியினர் கடன் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 157,960 இனை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் ஆகஸ்ட் 2022 ஆம் ஆண்டில் பதிவழிப்பு செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்த போதும் நாளதுவரை பதிவழிக்கப்பட்டிருக்காது அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கில் நிலுவையாக காட்டப்பட்டிருப்பதனால் மீளாய்வாண்டிற்கான அரச உத்தியோகத்தர் முற்பணக்கணக்கு மீதி ரூபா 157,960 ஆல் அதிகரித்துக காட்டப்பட்டுள்ளது.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

1.6.2 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

ஏனைய திணைக்களங்களால் மாவட்டச்செயலகத்திற்கு அரச உத்தியோகத்தர் முற்பணக்கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்த வரவு மீதியானது கட்டுநிதி சீராக்கல் கணக்கில் காட்டப்பட்டிருக்காது திறைசேரிப் புத்தகத்தில் (SA – 51) ரூபா 385,390 ஆகக் காட்டப்பட்டிருப்பதனால் ரூபா 385,390 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.6.3 நிதி நிலைமைக் கூற்று

1.6.3.1 நிதியல்லாத சொத்துக்கள்

2022 திசெம்பர் 31 இல் இருந்தவாறான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்கள் கூட்டுமொத்தம் ரூபா 1,432,058,050 ஆகவும் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் கூட்டுமொத்தம் ரூபா 1,454,597,866 ஆகவும் காட்டப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டிற்கான நிதிநிலைமைக்கூற்றில் நிதியல்லாத சொத்துக்கள் கூட்டுமொத்தம் ரூபா 22,539,816 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

1.6.3.2 கட்டுநிதி கணக்கு மீதி

மீளாய்வாண்டில் 04 யூலை 2022 அன்று மாவட்டச் செயலகத்தால் திறைசேரிக்குத் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த கட்டுநிதி மீதி ரூபா 27,158,000 மீளாய்வாண்டிற்கான நிதிநிலைமைக்கூற்றில் தீர்க்கப்படாத பணி முற்பணக் கணக்கு மீதியாகவும் காசும் காசுக்கு சமனானவையாகவும் தவறாகக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

1.6.4 கணக்காய்விற்குப் போதிய எழுத்துருவிலான சான்றுகளின்மை

மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகத்தினால் பசுமையான தேசம் வீட்டுத்தோட்டப் பயிர்செய்கை வேலைத்திட்டம், கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டம் ஆகிய விடயங்களுக்காக மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களால்

கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 200.8 மில்லியன் கொடுக்கல் வாங்கல்களில் மாவட்ட செயலகத்தினால் கூட்டுமொத்தம் ரூபா 1.4 மில்லியன் பெறுமதியான பழமரக்கன்றுகள், விதை தானியங்கள், மரக்கறிச் செடிகள் மற்றும் விவசாய உபகரணங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டு 139 நிறுவன அலகுகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இவற்றுக்கான அனுமதிக்கப்பட்ட பயனாளிகள் தெரிவு விண்ணப்பங்கள், தெரிவு அடிப்படைகள், முளைதிறன் பரீட்சிப்பு அறிக்கை, செயற்றிட்ட முன்னேற்ற அறிக்கைகள், பயிர் அறுவடை அல்லது விளைவுகள், பயிர்ச் செய்கை மூலம் எதிர்பார்க்கப்பட்ட அடைவு மதிப்பீடு, உபகரணங்களின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை என்பன நாளதுவரை கணக்காய்வுக்கு கிடைத்திருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்குரிய ஆவணங்கள், பதிவேடுகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையாதலால் அவற்றினைக் கணக்காய்வில் திருப்திகரமாகப் பரீட்சித்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை / நாளதுவரைப்படுத்தப்பட்டிராமை

இல.	பதிவேடுகளின் வகை	உரிய பிரமாணம்	பேணப்படவில்லை / நாளதுவரைப்படுத்தப்படவில்லை
(i)	மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு	நிதிப்பிரமாணம் 454(2)	பேணப்படவில்லை
(ii)	பெறுகைக்குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் வருகைப்பதிவேடு	அரசாங்க பெறுகை வழிகாட்டி 2.11.2	பேணப்படவில்லை
(iii)	கேள்வி கோரல் பதிவேடு	அரசாங்க பெறுகை வழிகாட்டி 5.2.1	பேணப்படவில்லை
(iv)	பொறுப்புக்கள் பதிவேடு	நிதிப்பிரமாணம் 214	நாளது வரைப்படுத்தப்படவில்லை

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2019 ஆம் ஆண்டுக்கான மேலதிகநேரவேலை மற்றும் விடுமுறைநாட் கொடுப்பனவு கூட்டுமொத்தம் ரூபா 5,889,249 ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களின் உள்ளபடியான ஆளணியினர் எண்ணிக்கையானது அனுமதிக்கப்பட்ட ஆளணியினரின் வீதாசாரத்தினைக் காட்டிலும் உயர்வாகக் காணப்பட்ட போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்த மேலதிகநேர மற்றும் விடுமுறை நாட்களுக்கான கொடுப்பனவுகள் முறையே 48 சதவீதம் தொடக்கம் 86 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. மேலும் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் இது கூட்டுமொத்தம் ரூபா 8,255,221 ஆக அல்லது 40 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை 25 மே 2022 ஆம் திகதியிடப்பட்ட 10/2022 இலக்கமிடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 02 இற்கு முரணானதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு பசுமையான தேசம் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை வேலைத்திட்டம், கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம், பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் போன்ற விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிர்வாக செலவின வகுதிக்குரிய நிதி ஒதுக்கீடுகளிலிருந்து அவ் வேலைகளுடன் தொடர்புபட்டிருக்காத கடமைகளை மேற்கொண்டமைக்காக மேலதிகநேரம் மற்றும் விடுமுறைநாட் கொடுப்பனவுகள் கூட்டுமொத்தம் ரூபா 836,346 செலுத்தப்பட்டிருந்த 25 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

2.2 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்

மீளாய்வாண்டிற்கான கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்காது மாவட்டச் செயலகம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் என்பவற்றினால் 2023 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 2022 திசெம்பர் மாதத்திற்கான அலுவலருக்கான பிரயாணப்படிகள், வாகன சுத்திகரிப்பு கட்டணம், வாகனக் காப்புறுதிக்கட்டணம், தொலைபேசிக்கட்டணம், பாதுகாப்புச்சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவைக்கட்டணங்கள் கூட்டுமொத்தம் ரூபா 480,139 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 13 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

(அ) மீண்டெழும் செலவினம்

மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்காக 21 செலவின தலைப்புக்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 3 தொடக்கம் 86 சதவீதம் வீச்சிலான சேமிப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 5,990,501 ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மூலதனச் செலவினம்

மீளாய்வாண்டில் மூலதன செலவினத்திற்காக 08 செலவின தலைப்புக்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 1 தொடக்கம் 100 சதவீதம் வீச்சிலான சேமிப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 1,070,421 ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி	இணங்காமைகள்
		ரூபா	
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிஒழுங்கு விதிகள்		
(i)	இலக்கம் 136,137 மற்றும் 138	1,033,210	02 காசோலைகள் 30 திசெம்பர் 2022 திகதியில் 01 வழங்குனருக்குரியதாக வரையப்பட்டு குறித்த வேலைகள் நிறைவுறாமை காரணமாக மாவட்ட செயலகத்தின் நிதிக் கிளையில் நாளதுவரை தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.
(ii)	இலக்கம் 571	2,632,447	மாவட்டச் செயலகத்தினால் குறித்த நோக்கங்களுக்கு உபயோகிக்கப்பட்டிராத மற்றும் காலங்கடந்த நிலையிலுள்ள வைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது கடந்த 02 தொடக்கம் 04 ஆண்டுகளாக பொது வைப்புக்கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.
(iii)	702 (3)	-	மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த

			பல்வேறுபட்ட ஒப்பந்த வேலைகளுக்குரிய உடன்படிக்கைப் பத்திரத்தின் பிரதிகள் கடந்த 05 ஆண்டுகளாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் அச் செயற்றிட்டங்களின் முன்னரான மற்றும் வேலைச் செயன்முறைகளின் போதான கணக்காய்வுப் பரீட்சிப்பை மேற்கொள்ள முடியாதிருந்தது.
(iv)	இலக்கம் 757	-	மாவட்டச் செயலகத்தின் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வுக்கமைவாக 22 உருப்படிகளின் சோர்வு மற்றும் 67 உருப்படிகளின் மேலதிகம் தொடர்பாக நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	**சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை**		
	31 திசெம்பர் 2018 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 04/2018 இன் பந்தி 03	11,666,776	மாவட்டச்செயலகங்கள் மற்றும் 06 பிரதேச செயலகங்களினால் பயன்படுத்தப்பட்டு வந்த அலுவலக உபகரணங்களில் ஒவ்வொன்றும் ரூபா 5,000 க்கு குறைவான பெறுமதியுடைய 5,822 உருப்படிகள் தொடர்நதும் நிதியல்லா சொத்துக்களாகக்

			காட்டப்பட்டிருந்தன.
(இ)	தாபனவிதிக்கோவை அத்தியாயம் XXIV இன் பிரிவு 4	122,391	பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இரு உத்தியோகத்தர்களினது இடர்கடன் நிலுவைகளினை அறவிட்டுக்கொள்வதற்கு கடந்த 05 வருடங்களுக்கு மேலாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

2.5 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவும்

விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்காக மாவட்டச் செயலகத்தினால் உடன்படிக்கைகள் எதுவுமின்றி நெற்கொள்வனவுக்கென இரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த நெல் கொள்வனவுக்கான முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 20,729,785 இல் கூட்டுமொத்தம் ரூபா 17,634,125 அல்லது 85 சதவீதம் 31 மார்ச் 2023 வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.6 வைப்புக்கள்

---

31 மே 2012 ஆம் ஆண்டில் லங்கா கனிய மணல் லிமிட்டெட் இனால் மாவட்ட செயலகத்திற்கு காணி கொள்வனவிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,250,000 தொகையானது கடந்த 10 வருடங்களுக்கு மேலாக உரிய காணி பராதீனப்படுத்தப்பட்டிருக்காமையால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின்றி மாவட்டச் செயலகத்தின் பொது வைப்புக்கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டிலும் நேர்முன்னைய வருடத்திலும் மாவட்ட செயலகம் மற்றும் ஆறு பிரதேச செயலகங்களினால் 28 ஆகஸ்ட் 2020 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்கமிடப்பட்ட அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பந்தி 03 இற்கமைவாக விதந்துரைக்கப்பட்டிருந்த படிவங்களில் செயற்பாட்டுத்திட்டம், பெறுகைத்திட்டம், உள்ளகக்கணக்காய்வு நிகழ்ச்சிநிரல் மற்றும் மனிதவள அபிவிருத்தித்திட்டம் என்பவற்றையுள்ளடக்கியதான வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தினைத் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.1.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 12 வகையான செயற்திட்டங்கள் மூலம் நிதியளிப்பு செய்யப்பட்டு மாந்தைகிழக்கு, ஓட்டுசுட்டான், துணுக்காய் மறறும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களினால் கூட்டுமொத்தம் ரூபா 183.9 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்த 118 வீடுகள் கடந்த 06 தொடக்கம் 10 ஆண்டுகளாக உபயோகிக்கப்பட்டிராது காணப்பட்டதுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பின்தொடர் நடவடிக்கைகளும் நாளதுவரை நலிவடைந்திருந்தன.

(ஆ) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடமிருந்து பெறப்பட்டிருந்த நிதியிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 24.19 மில்லியன் கிரயத்தில் மாவட்டச்செயலகத்தினால் 26 திசெம்பர் 2014 அன்று செல்வபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பற்ற மற்றும் துஸ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பு நிலையமானது 481 இருப்புப் பொருட்களுடன் வசதிப்படுத்தப்பட்டிருந்த போதும் கடந்த 08 ஆண்டுகளாக குறித்த திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்பட்டிருக்காது இந்நிலையம் பயன்பாடின்றிக் காணப்பட்டது.

(இ) 2020 ஆம் ஆண்டில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் சப்ரிகம செயற்திட்டத்தின் மூலம் ரூபா 1.48 மில்லியனுக்கு எண்ணெய் உற்பத்தி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றினை இயக்குவதற்கு தேவையான உயரழுத்த மின்னிணைப்பு வசதிப்படுத்தப்பட்டிராத திருமுறிகண்டி கிராம அபிவிருத்தி அமைப்புக்கு வழங்கப்பட்டமையால் குறித்த இயந்திரங்கள் உரிய நோக்கத்திற்கு இற்றைவரை பயன்படுத்தப்படாது பழுதடையும் நிலையில் காணப்பட்டன.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்டச்செயலகத்துக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த மின்பிறப்பாக்கியொன்று 06 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதுள்ளதுடன் 2016 திசெம்பரில் 9.8 மில்லியனுக்கு மாவட்டச் செயலகத்தின் பிரதான மின்துண்டிப்பு வேளைகளில் மாத்திரம் உபயோகிக்கப்படுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 502 கிலோவாற்று (502KW) மின்வலுவுடைய வேறொரு மின்பிறப்பாக்கியானது கடந்த 06 ஆண்டுகளாக 385 மணித்தியாலங்கள் மாத்திரமே தொழிற்பட்ட நிலையில் அதன் மின்மாற்றி (change over) இயக்கமற்றிருப்பதால் திருத்தப்பட வேண்டிய நிலையில் விடப்பட்டுள்ளது.

(ஆ) மாவட்டச்செயலகம் மற்றும் துணுக்காய், புதுக்குடியிருப்பு, வெலிஓயா, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களின் பயன்பாட்டில் காணப்படுகின்ற 13 வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது கடந்த 05 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மாவட்டச் செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் துணுக்காய் பிரதேச செயலகம் என்பவற்றினால் பயன்படுத்தப்பட்டு 03 ஆண்டுகளுக்கு மேலாக பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் 15 வாகனங்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2019 செப்தெம்பர் 10 அன்று முள்ளியவளையிலுள்ள உலக உணவுத் திட்டத்திற்கான சளஞ்சியசாலையில் பௌதீக செவ்வை பார்த்தலுக்குட்படுத்தப்பட்டிருந்த 06 மோட்டர் சைக்கிள்கள் மற்றும் 02 லொறிகளில் 03 மோட்டார் சைக்கிள்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் ஏனைய 03 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 02

லொறிகளின் தற்போதைய நிலைப்பாடு கணக்காய்வுக்கு அறியக் கிடைத்திருக்கவில்லை.

3.3 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைப்பு

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் 2022 மார்ச் 16 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 04/2020 இன் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களின் பிணைப்பணம் செலுத்தப்பட வேண்டிய 27 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டிய பிணைப்பணம் கூட்டுமொத்தம் ரூபா 294,000 நாளதுவரை பெற்றுக்கொள்ளப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மாவட்டச் செயலகத்தின் 05 அலுவலக வாகனங்களுக்கு 2019 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த விபத்துக்கள் மீதான சேதாரங்களை எழுமாற்றாகத் தெரிவுச் செவ்வைக்குட்படுத்தியதில் கூட்டுமொத்தம் ரூபா 1,391,124 இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு காப்புறுதிப் பங்களிப்பிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 664,783 இழப்புக்கள் சீர்செய்யப்பட்டு எஞ்சிய சேதாரங்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 726,341 கடந்த 2019 தொடக்கம் 2022 ஆம் ஆண்டுகளுக்கான மீண்டுவரும் / மூலதனச்செலவுக்கான ஒதுக்கீடுகளிருந்து செலுத்தப்பட்டன. எவ்வாறாயினும் அத்தகைய இழப்புக்களின் பெறுமதிகள் மாவட்டச் செயலகத்தின் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் பற்றிய கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்டச் செயலகத்தில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கி செயலிழந்துள்ளமையால் மாவட்டச் செயலகத்தின் பல்வேறு அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த 29 கணனி மற்றும் கணனி உபகரணங்கள், 02 போட்டோ பிரதியாக்கும் இயந்திரங்கள் மற்றும் 14 ஏனைய உபகரணங்கள் என்பன 28 பெப்ரவரி 2023 அன்று ஏற்பட்டிருந்த இடிமின்னல் காரணமாக முற்றாகச் செயலிழந்து போயிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அத்தகைய இயந்திர உபகரணங்களின் பெறுமதிகள் கணக்காய்வுக்குக் கிடைத்திருக்கவில்லை. மேலும் இவற்றினை திருத்தம் செய்வதற்கு கூட்டுமொத்தம் ரூபா 1,990,000 க்கு 15 மார்ச் 2023 அன்று மாவட்டச் செயலகத்துக்கு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இடிதாங்கியினை பயன்மிக்க வகையில்

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

செயற்படுத்துவதனூடாக மனித மற்றும் பௌதீக இலத்திரனியல் வளங்களுக்கு ஏற்படக்கூடிய இவ் இயற்கை அனர்த்தங்களை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாளதுவரை மாவட்டச் செயலகம் தவறியிருந்தது.

3.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்தி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முள்ளியவளையில் அமைக்கப்பட்டிருந்த உலக உணவுத் திட்டத்தினது மாவட்ட களஞ்சியசாலையில் 10 செப்தெம்பர் 2019 அன்று நேரடி கணக்காய்வுப் பௌதீக செவ்வை பார்த்தலுக்குட்படுத்தப்பட்டிருந்த 66 வகையான பொறி உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், தளபாடங்கள், கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் என்பவற்றில் 37 வகையான அத்தகைய 1,517 உருப்படிகள் மீளாய்வாண்டில் செவ்வை பார்த்தலுக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் அக் களஞ்சியசாலையிலிருந்து வேறு 17 வகையான 515 உருப்படிகள் 2023 பெப்ரவரியில் மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் களஞ்சியசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பயனுறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது தொடர்ந்தும் தேக்கி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) துணுக்காய் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களுக்கு 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த இரு தண்ணீர் பவுசர்கள் கடந்த 03 ஆண்டுகளாகக் குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்காது வாகன தரிப்பிடத்தில் பழுதடையும் நிலையில் விடப்பட்டிருந்தன.

3.6 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பதிவாளர் நாயகத்திணைக்களம், வடமாகாண காணி நிர்வாகத் திணைக்களம், மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் என்பன தொடர்பிலான வேலைகளை மேற்கொண்டிருந்த முறையே 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 2019 அக்டோபர், 2022 சனவரி மற்றும் மார்ச் மாதங்களின் பின்னர் பிரதேச செயலாளரிடம் முன்னனுமதி பெறப்பட்டிருக்காது தொடர்ச்சியாக கடமைக்கு சமுகமளிக்காதிருந்தனர். எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரினால் உரியவாறு அவர்களின் திணைக்களத் தலைவருக்கு உரிய காலத்தில் அறியக்

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

கொடுக்கப்பட்டிருக்காது 02 தொடக்கம் 31 மாதங்கள் காலம் தாழ்த்தி அறியக் கொடுக்கப்பட்டிருந்தமையால் அவர்களுக்கு கடமைக்கு அறிக்கையிடப்பட்டிராத மேற்படி காலத்துக்கு ஆளணி வேதனாதிகள் செலுத்தப்பட்டிருக்க ஏதுவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அத்தகைய சம்பளக் கொடுப்பனவு விபரங்கள் பிரதேச செயலகத்திலிருந்து கணக்காய்வுக்குக் கிடைத்திருக்கவில்லை.

3.7 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

மாவட்ட செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களுக்கு உரித்துடைய காணிகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வரும் காணிகளுக்குரிய உறுதிப்பத்திரங்கள் அல்லது காணிசுவீகரித்தல் கட்டளை (Vesting Order) மற்றும் நிலஅளவை வரைபடங்கள் என்பன கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பெற்றுக்கொள்வதற்கோ அவற்றின் நியாயமான பெறுமதியினை மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. நிலைபேறான அபிவிருத்தி

4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை (2030 ஆம் ஆண்டளவில்) அடைந்து கொள்ளும் பொருட்டு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காகச் செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன 05 ஆண்டுகளாக அடையாளம் காணப்பட்டுச் செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. மனிதவள முகாமைத்துவம்

5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

நிதி அமைச்சின் 2021 யூலை 28 திகதியிடப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருப இலக்கம் 01/2021 இன் பந்தி 2.2(அ) இற்கு முரணாக மிகை ஆளணியினராகக் காணப்பட்ட 256 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 03 சனவரி 2022 தொடக்கம் நியமிப்புச் செய்யப்பட்டு நாளதுவரை முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அப் பதவியினர் அங்கீகரிக்கப்பட்டிராத நிலையில் மீளாய்வாண்டில் 01 யூலை 2021 இல் இருந்த அங்கீகரிக்கப்பட்ட ஏனைய பதவியணியினர்களுக்கென வழங்கப்பட்டிருந்த ஆளணி வேதனாதிகளில் வெற்றிடமாகக் காணப்பட்ட அப் பதவியணியினருக்கான நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி மேற்படி மிகை ஆளணியினருக்கு கூட்டுமொத்தம் ரூபா 11,978,240 ஆளுக்குரிய வேதனாதிகள் கொடுப்பனவாக மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

பா.பற்குணன்
சிரேஸ்ட உதவிக்கணக்காய்வாளர் தலைமைஅதிபதி
கணக்காய்வாளர் தலைமைஅதிபதிக்காக

அத்தியாயம் - 04

செயலாற்றுகைச்சுட்டிகள்

நிறுவனத்தின்செயலாற்றுகைச்சுட்டிகள் (செயற்பாட்டுத்திட்டத்தின்அடிப்படையில்)

குறிப்பீட்டுசுட்டிகள்	எதிர்பார்த்தவெளியீட்டின்சதவீதமாக(%) உண்மையானவெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
வீட்டு உதவி வழங்கல்	✓		
சமுர்த்தி திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட குடும்பங்கள்	✓		
வீட்டுத்தோட்டம்	✓		
குளங்கள் புதுப்பித்தல்	✓		
சுகாதார நிறுவனங்களுக்கான புதிய கட்டடம்	✓		
சுகாதார மையங்களுக்கான மேம்பட்ட வசதிகள்	✓		
நவீன வகுப்பறை புதுப்பித்தல்,கட்டுதல்	✓		
நீர் சுத்திகரிப்பு முறையை நிறுவுதல்	✓		
இலவச மின்சார திட்டம் வழங்கல்	✓		
கிராமிய வீதிகள் திருத்தம்	✓		
விளையாட்டு மைதானங்கள் திருத்தம்	✓		

அத்தியாயம்- 05

பேண்தகுஅபிவிருத்திஇலக்குகளை (SDG) அடையும்செயலாற்றுகை

5.1அடையாளம் காணப்பட்டபேண்தகுஅபிவிருத்திஇலக்குகளைசுட்டிக்காட்டுக

நோக்கம்/ தூரநோக்கு	இலக்கு	அடைவுமட்டம் சுட்டிகள்	முன்னேற்றம்		
			0 – 49	50-74	75– 100
01.பசியின்மை	அனைவருக்கும் உணவு	17507 வீட்டுத்தோட்டம் நிறுவப்பட்டுள்ளது. பாரம்பரிய உணவு நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.			✓
	விவசாய உட்கட்டுமான அபிவிருத்தி	11 விவசாய நிலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது			✓
02.நல்ல ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வு	மேம்படுத்தப்பட்ட சுகாதார நிறுவனங்கள்	01 கிராமிய சுகாதார மையங்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.			✓
03.தரமான கல்வி	மேம்பட்ட கல்வி வசதிகள்	32 வகுப்பறை கட்டடம் கட்டப்பட்டது/ புதுப்பிக்கப்பட்டது. 06Smart வகுப்பறை கட்டடம் கட்டப்பட்டது. 08 பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டது.			✓
04.சுத்தமான நீரும் சுகாதாரமும்	சுகாதார வசதிகள்	02 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.			✓
	சுத்தமான நீர் வசதிகள்	07 சமுக நீர் வழங்கல் திட்டம் நிறுவப்பட்டது			✓
05.தூய்மையான சக்தி பெறல்	அனைவருக்கும் மின்சக்தி	04 இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டது			✓
06.தொழிற்துறை புனரமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு	சுலபமான போக்குவரத்து	925 கி.மீ கிராமபுற வீதி புனரமைக்கப்பட்டது. 05 மதகுகள் புனரமைக்கப்பட்டது. 01 பேரூந்து தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது.			✓
07.நிலையான நகரமும் சமுகமும்	மேம்பட்ட பொழுதுபோக்கு	03 விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டது			✓

5.2 பேண்தகுஅபிவிருத்திஇலக்குகளின்அடைவுகள்மற்றும்சவால்களைசுருக்கமாகவிபரிக்குக

அபிவிருத்தி திட்டங்களை நிலையான நீண்டகால நடைமுறைகளாக மாற்றுவதற்கான அரசியல் விருப்பம்,பணவீக்கம், காலநிலை நெருக்கடி, அதிகரித்துவரும் ஏற்றத்தாழ்வுகள், ஓரங்கட்டப்படும் சமூகக் குழுக்கள், நீதிக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல், சுற்றுச்சூழல் சீரழிவு போன்ற ஆளுகைகள் அனைத்தும் காரணிகளாக உள்ளன.

அத்தியாயம்- 06

மனிதவளவிபரம்

6.1பதவியணிமுகாமைத்துவம்

	அங்கீகரிக்கப் பட்டபதவிய ணி	தற்போதுள்ள பதவியணி	பதவிவெற்றிடம்/ (அதிகப்படியான)
சிரேட்ட	37	27	10
மூன்றாம்நிலை	28	7	21
இரண்டாம்நிலை	563	566	253/ (256)
ஆரம்பநிலை	75	44	31

6.2. பற்றாக்குறையான மனித வளங்களினால் நிறுவனத்தின் செயலாற்றுகை கீழ்குறிப்பிட்ட வழிகளில் பாதிப்படையும்.

1. அதிக வேலைச் சுமை காரணமாக உத்தியோகத்தர்களுக்கு வேலைத்திருப்தி காணப்படாததால் அவர்கள் ஈடுபாட்டுடன் வேலையினை மேற்கொள்ள மாட்டார்கள் இது நிறுவனத்தின் இலக்கினை அடைவதில் பாதிப்பு ஏற்படும்

2. இரண்டாம் தர பதவியணியில் மேலதிக ஆளணி காணப்பட்டாலும் அதே தரத்தில் காணப்படும் பற்றாக்குறையான பதவியணியினரின் கடமைகளை இவர்களின் மூலம் நிறைவேற்றிக் கொள்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. பற்றாக்குறையான மனித வளங்களினால் அதிக வேலைச் சுமையினை ஏனையவர்கள் சுமக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் இதனால்

1. மன உழைச்சல்
2. அட்டவணைக்கு ஏற்ப வேலையினை நகர்த்த முடியாமை
3. பொதுமக்களுக்கு உடனுக்குடன் சேவை வழங்குவதில் தாமதம் ஏற்படல்

இதனால் நிறுவனத்தின் இலக்கினை அடைய முடியாது. நிறுவன வளர்ச்சி பாதிப்படையும்.

அதேசமயம் அதிகப்படியான மனித வளங்களினால் அவர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் உட்பட அனைத்து இதர செலவுகளுக்குமான மதிப்பீடு அறிக்கையினூடாக நிறுவனத்தின் வருமானத்திலும் மற்றும் ஆளணியூடாக தேவையற்ற முரண்பாடுகள் பிரச்சினைகள் உருவாகுவதுடன் நிறுவனத்தின் நன்மதிப்பிலும் தாக்கம் செலுத்தி நிறுவன செயலாற்றுகை பாதிப்படையும்.

06.3 - மனித வள அபிவிருத்தி

நிகழ்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்ட காலம்	மொத்த முதலீடு (ரூபா 000)		நிகழ்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு,வெளிநாட்டு)	பெற்றுக்கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளி நாட்டு		
உத்தியோகத்தர்களின் ஆளுமை விருத்தி தொடர்பான பயிற்சிநெறி	99	2 நாட்கள்	50,000.00	-	உள்நாட்டு	உத்தியோகத்தர்களின் வினைத்திறனான கடமைகள்
உற்பத்திதிறன் பயிற்சிநெறி	93	2 நாட்கள்	50,000.00	-	உள்நாட்டு	உத்தியோகத்தர்களின் வினைத்திறனான கடமைகள்
பட்டப் பின்படிப்பு	1	2021/2022	171,500.00	-	உள்நாட்டு	அபிவிருத்தி பொருளியல்
திசைமுகப்படுத்தும் பயிற்சிநெறி	23	2 நாட்கள்	-	-	உள்நாட்டு	உத்தியோகத்தர்களின் வினைத்திறனான கடமைகள்
SYSCGAA அலுவலக முகாமைத்துவம்	07	1நாள்	-	-	உள்நாட்டு	அலுவலக நிர்வாக முறைகள் தொடர்பான அறிவு கிடைக்கப்பெற்றுள்ளது
தகவல் தொழில்நுட்ப பயிற்சி திட்டம்	104	6 மணி நேரம்	31,260.00	-	உள்நாட்டு	தகவல் தொழில்நுட்ப அறிவு அதிகரித்துள்ளது.
திட்ட முகாமைத்துவ பயிற்சித் திட்டம்	70	6 மணி நேரம்	28,740.00	-	உள்நாட்டு	திட்ட முகாமைத்துவ அறிவு அதிகரித்துள்ளது.
அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான திறன்மேம்பாட்டு பயிற்சி திட்டம்	60	5 நாட்கள்	102,300.00	-	உள்நாட்டு	நிதி ஒழுங்கு விதிமுறைகள், அலுவலக நடைமுறைகள், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு
புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நோக்கு நிலை பயிற்சி திட்டம்	160	2நாட்கள்	110,210.00	-	உள்நாட்டு	நிதி ஒழுங்கு விதிமுறைகள், அலுவலக நடைமுறைகள், தகவல் தொழில்நுட்பம்,நேர் சிந்தனை, தலைமைத்துவம், உடல் ஆரோக்கியம்,திட்ட முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவம் உற்பத்திதிறன்,02ம் மொழி தொடர்பான அறிவு

SYSCGAA அலுவலக முகாமைத்துவம்பயிற்சி திட்டம்	70	1நாள்	29,600.00	-	உள்நாட்டு	**SYSCGAA** அலுவலக முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்
முதலுதவி பயிற்சி திட்டம்	40	1நாள்	16,800.00	-	உள்நாட்டு	முதலுதவி தொடர்பான அடிப்படை அறிவு
உள்ளக கணக்காய்வு விடயம் தொடர்பான பயிற்சி	40	1நாள்	20,600.00	-	உள்நாட்டு	உள்ளக கணக்காய்வு தொடர்பான விடயங்கள்
ITMIS கணக்கியல் முறை பற்றிய பயிற்சி	30	4 நாட்கள்	128,011.00	-	உள்நாட்டு	ITMIS அலுவலக முகாமைத்துவம் தொடர்பாக விடயங்கள்
பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான மென்திறன்அபிவிருத்தி பயிற்சிதிட்டம்	80	2 நாட்கள்	65,800.00	-	உள்நாட்டு	மென்திறன்அபிவிருத்தி தொடர்பானவிடயங்கள்
வினைத்திறன் காண் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான பயிற்சி வகுப்பு	40	01 நாள்	28,000.00	-	உள்நாட்டு	வினைத்திறன் அறிவு
வினைத்திறன் காண் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான பயிற்சி வகுப்பு	45	01 நாள்	23,025.00	-	உள்நாட்டு	வினைத்திறன் அறிவு
நேர் சிந்தனை தொடர்பான பயிற்சி வகுப்பு	40	01 நாள்	48,975.00	-	உள்நாட்டு	நேர் சிந்தனையான அறிவு
வினைத்திறன் காண் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான பயிற்சி வகுப்பு	53	01 நாள்	32,430.00	-	உள்நாட்டு	வினைத்திறன் அறிவு
வினைத்திறன் காண் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான கணனி பயிற்சி வகுப்பு	36	01 நாள்	9,480.00	-	உள்நாட்டு	வினைத்திறன் அறிவு
Microsoft Access தரவுத்தள பயிற்சித் திட்டம்	25	03 நாட்கள்	15,900.00	-	உள்நாட்டு	உத்தியோகத்தர்களின் கணணித்திறனை வளர்த்ததன் மூலம் அலுவலக பணிகளை திறம்படவும், திறமையாகவும் மேற்கொள்ள முடிந்தது
அலுவலக நடைமுறை பயிற்சித் திட்டம்	20	01 நாள்	2,500.00	-	உள்நாட்டு	அலுவலக பணிகளை திறம்பட மற்றும் திறமையாக மேற்கொள்ளும் திறன்
திறன் அபிவிருத்தி பயிற்சித் திட்டம்	20	01 நாள்	22,800.00	-	உள்நாட்டு	உத்தியோகத்தர்களின் திறன்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் அலுவலக பணிகளை திறனாகவும் திறமையாவும் மேற்கொள்ள முடிந்தது
திறன் அபிவிருத்திபயிற்சித்	20	01 நாள்	18,200.00	-	உள்நாட்டு	உத்தியோகத்தர்களின் திறன்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் அலுவலக

திட்டம்						பணிகளை திறம்பட மற்றும் திறமையாக மேற்கொள்ள முடிந்தது
TSC நடைமுறை விதி பயிற்சித் திட்டம்	20	01 நாள்	20,100.00	-	உள்நாட்டு	அலுவலக பணிகளை திறம்பட மற்றும் திறமையாக மேற்கொள்ளும் திறன்
TSC நடைமுறை விதி பயிற்சித் திட்டம்	20	01 நாள்	19,600.00	-	உள்நாட்டு	அலுவலக பணிகளை திறம்பட மற்றும் திறமையாக மேற்கொள்ளும் திறன்
TSC நடைமுறை விதி பயிற்சித் திட்டம்	20	01 நாள்	19,600.00	-	உள்நாட்டு	அலுவலக பணிகளை திறம்பட மற்றும் திறமையாக மேற்கொள்ளும் திறன்
ஒழுக்காற்று நடவடிக்கைகள்	30	02 நாட்கள்	40,100.00	-	உள்நாட்டு	ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான அறிவு
அலுவலக முறைமை, தகவல் தொழில்நுட்பம்	30	02 நாட்கள்	40,100.00	-	உள்நாட்டு	அலுவலக முறைமை, தகவல் தாழில்நுட்பம் தொடர்பான அறிவு
பட்டப் பின்படிப்பு-கணக்காளர்	1	2021/2022	140,000.00	-	உள்நாட்டு	அபிவிருத்தி பொருளியல்
குடும்பம் மற்றும் அலுவலகங்களில் ஏற்படும் மன அழுத்தத்தினை கையாளுதல்	45	4 மணி நேரம்	14,155.00		உள்நாட்டு	மன அழுத்த சூழ்நிலையை கையாளும் அறிவை பெற்றமை
கணணி பயிற்சி	60	6 மணி நேரம்	25,845.00		உள்நாட்டு	தகவல் தொழில்நுட்ப அறிவு அதிகரித்துள்ளது.
அலுவலக ஒழுங்கு விதிமுறைகள்	60	6 மணி நேரம	25,000.00		உள்நாட்டு	நிர்வாகம் தொடர்பான அறிவு அதிகரித்துள்ளது.

பயிற்சித் திட்டம் நிறுவனத்தின் செயல்திறனுக்கு எவ்வாறு பங்களித்தது என்பதைச் சுருக்கமாகக் கூறவும்

மேற்கூறப்பட்ட பயிற்சித் திட்டங்களினூடாக உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் விடயப் பரப்புக்களிலும் அவர்களது அறிவு விருத்தி செய்யப்பட்டுள்ளது. இவற்றினூடாக அவர்களின் வினைத்திறன் மற்றும் அறிவு மட்டம் அதிகரித்துள்ளமையினால் நிறுவனத்தினால் பொதுமக்கள் மற்றும் உள்ளக வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவையும் விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பயிற்சி நெறிகளினூடாக உத்தியோகத்தர்கள் தங்கள் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளிலும் இலகுவாக சித்தியடைவதால் தன்னிறைவடைந்த உத்தியோகத்தர்களினூடாக நிறுவனமும் உயர்வு நிலையை அடைந்துள்ளது.

நிறுவனத்தின் உயர்வு நிலையின் விளைவாக கடந்த ஆண்டு நடைபெற்ற உற்பத்தித்திறன் போட்டியில் மூன்றாம் இடத்திலிருந்து இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளதுடன் வருடார்ந்த கணக்கறிக்கை சமர்ப்பிப்பிலும் தொடர்ந்தும் முதலிடத்தை தக்க வைத்துள்ளது.

அத்தியாயம் - 07

இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர் முற்பணக்கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக்கணக்குகள்(வர்த்தக முற்பணக்கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக்கணக்கு	-		
1.5	சிறப்பு முற்பணக்கணக்கு	-		
1.6	ஏனைய	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொதுநிர்வாக சுற்றறிக்கை 267/2018இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA-N20)பதிவேட்டை புதுப்பித்தல்	இணக்கமானது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம் பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தினை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134 (2) டி.எம்.ஏ/ 1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கமானது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர்	இணக்கமானது		

	நாயகத்துக்கு சமர்ப்பித்தல்			
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணக்கமானது		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறுமாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்	-		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		

9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பந்தி 3.1 இன் படி விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமானது		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி.94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக்கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமானது		பதிவழித்தலுக்கான அனுமதிக் கடிதம் கிடைக்கப் பெற்றது
13	**பொது வைப்புக்கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்.	இணக்கமானது		
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15	**வருமானக்கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக்கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் .	இணக்கமானது		
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
17	**பொது மக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	இணக்கமானது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள்.. குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு	இணக்கமானது		

	அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்			
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் .'.பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது	இணக்கமானது		
19	**மனிதவள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிகைக இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்	இணக்கமானது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	இணக்கமானது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத்திட்டம், திறன் மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்கபட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்	இணக்கமானது		

முற்றும்